S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் பிப்ரவரி 03 * 2026 * மலர் -1 * இதழ்-245* VOL-1 * ISSUE-245 விலை ரூ.3 * பக்கம் -4

### இப்போது சமஸ்கிருதத்தையும் திணிக்க மத்திய அரசு முயற்சி:

# தமிழகத்தை படுகுழியில் தள்ள நினைக்கும் பா.ஜ.க.-அ.தி.மு.க. சதியை முறியடிப்போம்!

## “அண்ணா வழியில் அயராது உழைத்து சட்டசபைத் தேர்தலில் வெல்வோம்” என ஸ்டாலின் கடிதம்!!

சென்னை, பிப்.3

தமிழக வளர்ச்சியைத் தடுக்க நினைக்கும் அ.தி.மு.க. – பா.ஜ.க.வின் சதியை முறியடிப்போம் என தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:–

நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா நினைவு நாள் மடல்.

தாய்க்குப் பெயர் சூட்டி மகிழ்ந்த தனயன் என்ற பெருமைக்குரியவர், நமது மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர்சூட்டிய பெருமகன் பேரறிஞர் அண்ணா. திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற நம் மக்களுக்கான அரசியல் இயக்கத்தை 1949ஆம் ஆண்டு தொடங்கி, 18 ஆண்டுகளில் மக்களின் பேராதரவுடன் தி.மு.கழகத்தை அரியணை ஏற்றியவர்.

பேரறிஞர் அண்ணா சிறப்புமிக்க ஆட்சி இரண்டாண்டுகள் கூட முழுமையாக நீடிக்கவில்லை. கொடிய புற்றுநோய் காரணமாக இயற்கை நம் அண்ணனைப் பறித்துக் கொண்டது.

தவித்து நின்றது தமிழ்நாடு. கலங்கி அழுதனர் கழகத்தினர். அண்ணாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள அலைகடலெனத் திரண்டனர் தமிழர்கள். அது உலக சாதனை அளவாக கின்னஸ் புத்தகத்தில் பதியக்கூடிய வகையில் அமைந்தது. அண்ணாவை இழந்துவிட்ட கழகத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் வேறு கதி ஏது என்று மாநிலமே கலங்கி நின்ற நிலையில்தான், கழகத்தை இதயத்திலும், ஆட்சியைத் தோளிலும் சுமந்தார் நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர். 50 ஆண்டுகாலம் இந்த இயக்கத்தை வழிநடத்தி, 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப் பேற்று, நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்தார்.





பேரறிஞர் அண்ணா தி.மு.கழகத்தைத் தமிழ்நாட்டில் அரியணையில் ஏற்றியது என்பது இந்திய அரசியலில் ஒரு பெரும் திருப்பம். 1967இல் தொடங்கி, 2026ல் இன்று நடைபெறுகிற திராவிட மாடல் அரசு வரை, அண்ணா வகுத்துத் தந்த திராவிடப் பாதையைப் பின்பற்றியே ஆட்சி நிர்வாகத்தைநடத்திவருகிறோம். நம்மை எதிர்ப்பவர்கள் ஆட்சிக்கு வந்தபோதும், அண்ணாவின் பெயரைத் தான் உச்சரிக்க வேண்டியிருந்தது. அதுதான் திராவிட முன்னேற்றக்கழகம்எனும் பேரியக்கத்தின் கொள்கைக்கான வெற்றி.

இப்போதும் நாம் அண்ணாவழியில்அயராது உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்திக்கு இடமில்லை என்று இருமொழிக் கொள்கையை அண்ணா நிலைநாட்டிய மாநிலத்தில், இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசுக்குச் சாமரம் வீசும் அடிமையாக இருக்கிறது அண்ணாவின்பெயரை கட்சியில் வைத்திருக்கும் அ.தி.மு.க..

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்ல வேண்டிய மண்ணில், எந்த வகையில் மத வன்முறையைத் தூண்டலாம் என்பதே பா.ஜ.க.வின் நோக்கமாக உள்ளது. அதற்கு மவுன சாட்சியாக அமைதி காக்கிறது அ.தி.மு.க.

மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதைத் திராவிட மாடல் அரசு தனது ஒவ்வொரு செயல்பாட்டிலும்ஒன்றியபா.ஜ.க அரசுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது. திராவிட மாடலின் குரல், பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மற்ற மாநிலங்களிலும் ஒலிக்கிறது. மாநில சுயாட்சி என்றாலே பயந்து ஒளிந்து கொள்கிறது, சுயாட்சி எண்ணமோ சுயமரியாதை உணர்வோ இல்லாத அ.தி.மு.க. மக்களிடம் செல் என்று அண்ணா சொன்னது போல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத கொரோனா காலத்திலும் மக்களிடம் சென்றது, ஆட்சியில் மகத்தான திட்டங்களை செயல்படுத்தும் இந்த ஐந்தாண்டுகளிலும் மக்களுடனேயே பயணிக்கிறது. மக்களுக்காகவே செயல்படுகிற மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை 2026 சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற வைத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட வேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாட்டு மக்களின் மனதில் பதிந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு வஞ்சகம் செய்து வரும், தமிழர்களின் எதிரியான பா.ஜ.க.வும் அதனுடன் இணைந்துள்ள அ.தி.மு.க.வும் நமக்கு எதிராகச் செயல்படுவதாகநினைத்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீண்டும் படுகுழியில் தள்ள நினைக்கும் சதியை, அண்ணாவின் தம்பிகளான கலைஞரின் உடன்பிறப்புகளான உங்களால்தான் முறியடித்திட முடியும். அந்த உறுதியை ஏற்கும் வகையில், நாளை அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கம் நோக்கி அமைதிப் பேரணியில் உங்களில் ஒருவனான நானும் கழக முன்னோடிகளும் கழகத் தொண்டர்களும் பங்கேற்கிறோம்.

என்றென்றும் நம் நெஞ்சில் நிறைந்திருக்கும் அண்ணாவின் நினைவு நாளில் தமிழ்நாடெங்கும் அவரது நினைவைப் போற்றும் வகையில் கழகக் கிளைகள்தோறும் அண்ணாவின் படத்திற்கு மாலையிட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தி, முத்தமிழறிஞர் கலைஞர்வழங்கியஐம்பெரும் முழக்கங்களை உறுதிமொழியாக ஏற்று, தேர்தல் களப்பணிகளுக்கு ஆயத்தமாவோம்.

அண்ணா வழியில் அயராதுஉழைப்போம். மக்களிடம் செல்வோம். அவர்களின் ஆதரவுடன் சட்டமன்றத் தேர்தலில் உறுதியாக வெல்வோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### இந்தியாவிலேயே முதல்முறையாக

# மாமல்லபுரத்தில் உலகளாவிய சுற்றுலா மாநாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!!

சென்னை, பிப்.03–

தமிழக சுற்றுலாத்துறை சார்பில் முதல் முறையாக மாமல்லபுரத்தில் இன்றும் நாளையும் ( பிப். 2 ,3) உலகளாவிய சுற்றுலா மாநாடு நடைபெறுகிறது. இதை இன்று காலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

2025–2026 ஆம் ஆண்டிற்கான தமிழக நிதிநிலை அறிக்கையில் சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில்,

பொது மற்றும் தனியார் துறை முதலீடுகளை ஈர்க்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டு சுற்றுலாத் துறையில் தனியார் முதலீடுகளை ஈர்க்கும் "தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா மாநாடு நடத்த உத்தேசிக்கப்பட்டது.

தமிழகத்தின் பண்டைய கால பாரம்பரியம், கலாசாரம் உணர்த்தும் நினைவுச்சின்ன இடங்கள், இறைசக்தி மிகுந்த கோவில்கள்அமைந்துள்ள ஆன்மிக இடங்கள், மனம், உடலிற்கு புத்துணர்வு அளிக்கும் இயற்கை சுற்றுச்சூழல் இடங்கள், உல்லாச பொழுதுபோக்கு கடற்கரை பகுதிகள் என, அதிகளவில் சுற்றுலா பகுதிகள் உள்ளன. அத்தகைய பகுதிகள், உள்நாட்டு, சர்வதேசபயணிகளைகவர்ந்து, சுற்றுலா வருகின்றனர். உள்நாடு, சர்வதேச பயணியர் வருகையில், தமிழகமே நாட்டில் முதலிடம் வகிக்கிறது. சுற்றுலா மூலம் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுகிறது. மேலும், 300 புதிய இடங்களை தமிழக அரசு கண்டறிந்தது, பகுதிகளை மேம்படுத்தி முடிவெடுத்து, நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதையடுத்து சுற்றுலாத்துறையின் சார்பில் முதல் முறையாக செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள போர் பாயிண்ட்ஸ் ஷெரட்டன் , ஓட்டல் வளாகத்தில் இன்றும் நாளையும் ( பிப். 2 ,3) தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா மாநாடு2026 நடைபெறுகிறது.



தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையால் நடத்தப்பட்ட இம்மாநாடு, மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத் துறைகளை மேம்படுத்துவதற்கு, சுற்றுலா முதலீ ட்டாளர்களுடன் பொது தனி யார் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும். “தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா மாநாடு” தமிழ்நாடு சுற்றுலாத் துறையை உலகளாவிய முதலீட்டுத் தலமாக மாற்றும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள், சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், சுற்றுலாவை மேம்படுத்துபவர்கள், சுற்றுலா மற்றும் வர்த்தக துறைகள் சார்ந்தவர்த்தகநிபுணர்கள், சுற்றுலா தொழில்முனைவோர்கள் மற்றும் அரசு உயர்தர பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் சுற்றுலா தொடர்பான வேலைவாய்ப்பு வர்த்தக வளர்ச்சியும் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை 10 மணிக்கு தொடங்கிய மாநாட்டுக்கு சுற்றுலாத் துறைஅமைச்சர்ரா.ராஜேந்திரன், தொழில்துறை அமைச்சர்டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநாட்டைத் தொடங்கி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இதில் பலர் கலந்து கொண்டனர். மாநாடு நாளையும் நடக்கிறது.



நீலகிரி மாவட்டம் முதுமலை வனப்பகுதியில் இருந்து உணவு, தண்ணீரை தேடி காட்டு யானைகள் வெளியேறி சாலையில் உலா வந்தன. அதனை கண்ட வாகனங்கள் வழிவிட்டு நீண்ட தூரத்திற்கு அணிவகுத்து நின்றன.



சென்னைமாநகராட்சி, ரிப்பன்கட்டடவளாகத்தில்உள்ளகூட்டரங்கில் மாநகராட்சி கலைவிழாநிகழ்ச்சிநடைபெற்றது. இந்நிகழ்வில், துணைமேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணைஆணையர் (கல்வி) க.கற்பகம், நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), தா.இளைய அருணா (நகரமைப்பு). சர்பஜெயதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### அனைத்து மக்களின் அமோக ஆதரவுடன்

# 2026 சட்டமன்ற தேர்தலில் ஆட்சி பீடத்தை கைக்கொள்வோம்!

## த.வெ.க. தலைவர் விஜய் அறிக்கை!!

சென்னை,பிப்.03–

அனைத்து மக்களின்அமோக ஆதரவுடன் 2026 சட்டமன்ற தேர்தலில் ஆட்சி பீடத்தை கைக்கொள்வோம் என த.வெ.க. தலைவர் விஜய் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

த.வெ.க. 3–ம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கட்சியின் தலைவர் விஜய் தொண்டர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:–

என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்களுக்கு, நம் உயிரனைய இயக்கமான தமிழக வெற்றிக் கழகத்தின் மகிழ்ச்சிகரமான மூன்றாம் ஆண்டு, இன்று தொடங்குகிறது. இரண்டு ஆண்டுகளை இயல்பாகவும், இயல்பு தாண்டியும் நிறைவு செய்து, நீள்கிறது நம் அரசியல் பெரும்பயணம்.

முதன்மை அரசியல் சக்தியாகப் பரிணமிக்கும் முன்பே மக்கள் இயக்கமாக, மக்களோடு மக்களாகக் கலந்து நின்றவர்கள் நாம். இதை



நாடறியும். நல்லவர்கள் அறிவார்கள்.

ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். சலனங்களைப் புறந்தள்ளி, சமநிலை தவறாத, அளக்கவியலாத ஆழ்கடல் த.வெ.க.; எவராலும் விலக்க இயலாத விரிவானம் த.வெ.க.; அத்தனை இலக்குகளையும் அர்ப்பணிப்புடன் வெல்லும், சாமானிய மக்களுக்கான அதிகார அரசியலின் வெற்றிப் போர்முரசம் த.வெ.க.

2026 சட்டமன்றத் தேர்தல் களம், இதுவரை இல்லாத புதிய சூழலைச் சுமந்து நிற்கிறது. இதற்கு ஒரே காரணம் நமது அரசியல் வருகை மட்டுமே என எல்லோரும் சொல்கின்றனர். எனவே இச்சூழலில், களத்தை நமதாக்கி, தேர்ந்த தெளிவுடனும் திறன்மிக்க நுட்பத்துடனும் தேர்தல் அரசியல் வெற்றியின் வாயிலாக, அதிகார அரசியல் அங்கீகாரம் நோக்கிச் செல்வோம். அனைத்து மக்களின் அமோக ஆதரவுடன், தீர்க்கமுடன் ஒற்றுமையாகக் களமாடி, ஆட்சி பீடத்தைக் கைக்கொள்ளும் ஜனநாயக இலக்கை உறுதியாக வெல்வோம்.

நல்லதே நடக்கும்.

வெற்றி நிச்சயம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பணகுடி பேரூராட்சிக்குட்பட்ட பாம்பன்குளம், கலந்தபனை, பகுதிகளில் அதிமுக தேர்தல் அறிக்கை துண்டு பிரசுரங்கள்!

## முன்னாள் எம்பி சௌந்தர்ராஜன் பொதுமக்களுக்கு வழங்கினார்!!



நெல்லை,பிப்.3

நெல்லை மாவட்டம் பணகுடி பேரூராட்சிக்குட்பட்ட பாம்பன்குளம், கலந்தபனை, ரோஸ்மியாபுரம் பகுதிகளில் பணகுடி அதிமுக நகரச் செயலாளரும், முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவருமான GT.லாரன்ஸ் தலைமையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் நெல்லை புறநகர் மாவட்டக் கழக அதிமுக பொருளாளருமான சௌந்தர்ராஜன் பொதுமக்களுக்கு அதிமுக தேர்தல் அறிக்கை துண்டு பிரசுரங்களை வழங்கினார். மேலும் அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் முதல் கட்ட ஐந்து தேர்தல் வாக்குறுதிகளான குடும்ப தலைவிகளுக்கு மாதம் 2000 ரூபாய், வீடு இல்லாதவர்களுக்கு விலையில்லா கான்கிரீட் வீடு, ஆண்களுக்கு இலவச பேருந்து பயணம், பெண்களுக்கு ₹25000 மானியத்தில் ஸ்கூட்டர் ஆகிய தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை சௌந்தரராஜன் வழங்கினார். தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் கோரிக்கையை தொடர்ந்து ஊரக வேலைவாய்ப்பு திட்டமானது 100 நாட்களில் இருந்து 125 நாட்களாக மத்திய அரசு தற்போது உயர்த்தியுள்ளது. அதிமுக ஆட்சியில் 125 நாட்களானது 150 நாட்களாகவும் உயர்த்தப்படும் எனவும் பொது மக்களிடம் தெரிவித்தார். இந்த நிகழ்வின் போது பணகுடி 2வது வார்டு கவுன்சிலர் டேவிட் ராஜன், 7வது வார்டு கவுன்சிலர் மணி, மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர்கள் இளையபெருமாள், பிரேம்குமார், பொன்பாண்டி, பணகுடி நகர அம்மா பேரவை செயலாளர் பாலசுப்பிரமணியன், பணகுடி நகர இலக்கிய அணி செயலாளர் ரஜினி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணைத் தலைவர் முத்துக்குட்டி, பணகுடி நகர ஐடி விங் செயலாளர் தமீம் அன்சாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா, தேர்தல் வட்டாட்சியர் அன்பு ஆகியோர் உள்ளனர்.






# இந்தியா முழுவதும் CBSE 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச சந்தேகத் தீர்வு உதவி மற்றும் மாதிரி ப்ரீபோர்டு தேர்வுகள்: PhysicsWallah அறிவிப்பு

சென்னை,பிப்.3

பிஸிக்ஸ்வாலா (PhysicsWallah PW) நிறுவனம், 2026ஆம் ஆண்டுக்கான CBSE 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு உதவும் வகையில், நாடு முழுவதும் இலவச சந்தேகத் தீர்வு வகுப்புகள் மற்றும் நிபுணர் வழிகாட்டுதலை அறிவித்துள்ளது. இந்த முயற்சி PW மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் உள்ள அனைத்து 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திறந்ததாகும். தேர்வு காலத்தில் ஏற்படும் கல்வி அழுத்தத்தை குறைத்து, மாணவர்கள் நம்பிக்கையுடன் தேர்வை எதிர்கொள்ள உதவுவதே இந்த திட்டத்தின் நோக்கம்.

மேலும், அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் ஆஃப்லைன் மாதிரி ப்ரீபோர்டு தேர்வுகளை வித்யாபீத், பாத்சாலா மற்றும் டியூஷன் மையங்களில் PW நடத்துகிறது.உண்மையானபொதுத்தேர்வுசூழலைபிரதிபலிக்கும் விதமாக கட்டுப்பாடுகளுடன் இந்த தேர்வுகள் நடைபெறும். இதன் மூலம் மாணவர்கள் பாட அறிவையும், நேர மேலாண்மை திறனையும் மேம்படுத்திக்கொள்ள முடியும். 'டவுட் பஸ்டர் பாஸ்' மூலம் அருகில் உள்ள PW மையங்களில் சந்தேகத் தீர்வு வகுப்புகளில் மாணவர்கள் பங்கேற்கலாம். வித்யாபீத்–ஆஃப்லைன் PW நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் அன்கித் குப்தா கூறுகையில், "கல்வி எந்த எல்லைகளும் கட்டுப்படக் கூடாது. பொதுத் தேர்வுகளுக்கு தயாராகும் ஒவ்வொரு மாணவரும் தரமான உதவியை எளிதில் பெற வேண்டும். எங்கள் மையங்கள் அனைவருக்கும் சிறந்தவையாக இருக்கும்; மாணவர்கள் நம்பிக்கையுடன் தங்கள் திறனை வெளிப்படுத்தத் தயாராக இருக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்," என்றார்.



# செய்தியாளர்களை தாக்கிய குண்டர்களை கைது செய்யகோரி அரசியல் கட்சிகள், அமைப்புகள் தாராபுரத்தில் ஆர்ப்பாட்டம்!

தாராபுரம்,பிப்.3

இந்த ஆர்ப்பாட்டத்தில்,தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியம்,விசிக முன்னாள் மாவட்டச் செயலாளர் தமிழ் முத்து, பாஜக மாநில இளைஞரணி செயலாளர் யோகேஸ்வரன்,இந்து மக்கள் கட்சி செல்வராணி,பகுஜன் சமாஜ் வாத கட்சி அலாவுதீன்,அப்துல் கலாம் அறக்கட்டளை நிறுவனர் அபுதாஹிர்,திராவிட கழக சக்திவேல்,தமிழ் புலிகள் கட்சி மேற்கு மண்டல செயலாளர் ஒண்டிவீரன்,ஆதித்தமிழர் முன்னேற்ற கழக மாவட்டச் செயலாளர் காளிமுத்து,மாவட்டத் தலைவர் பூக்கடை ராமர்,மூலனூர் ஒன்றிய செயலாளர் ஐயனார்,

எஸ்டிபிஐ கட்சி தாராபுரம் தொகுதி தலைவர் மன்சூர் அலி, இஸ்மாயில் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட கட்சியினர், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோர் கலந்து கொண்டு கண்டனங்களை தெரிவித்தனர். இதில், நியூஸ் தமிழ் தாராபுரம் செய்தியாளர்காஜாமைதீன்,திருப்பூர்மாவட்ட செய்தியாளர் பூபதி, அவிநாசி செய்தியாளர் ஞானசேகர், காங்கேயம் செய்தியாளர் நித்தியானந்தன், பல்லடம் செய்தியாளர் சரவணகுமார் தாராபுரம் செய்தியாளர் பிரபு. உள்ளாட்சி அரசு தாராபுரம் நிருபர் அக்கீம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு,

"செய்தியாளர்கள் மீது தாக்குதல் நடத்துவது ஜனநாயகத்தின் குரலை அடக்கும் செயல்" என கடுமையாகக் கண்டித்தனர். "தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கண்டனங்களை பதிவு செய்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், பாதிக்கப்பட்ட செய்தியாளர் மற்றும் ஒளிப்பதிவாளருக்கு உடனடி அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

செய்தியாளர்களை தாக்கிய குண்டர்களை கைது செய்ய வேண்டும்

சம்பந்தப்பட்ட கல் குவாரியை நிரந்தரமாக மூட வேண்டும் பத்திரிகையாளர் நல வாரியம் உறுப்பினருக்கான அடையாள அட்டை வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, தாராபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் எம். ராமச்சந்திரன் தலைமையில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



# கிருஷ்ணகிரி அருகே வீட்டின் கதவை உடைத்து 50 பவுன் தங்க நகைகளை திருடிய வழக்கில், ஒருவர் கைது!

கிருஷ்ணகிரி,பிப்.3

கிருஷ்ணகிரியை அடுத்த மேல்சோமார்பேட்டை கணபதி நகரை சேர்ந்தவர் கருப்பசாமி (48). வட்டி தொழில் செய்து வரும் இவர், பொங்கல் பண்டிகைக்காக குடும்பத்துடன் திருப்பூர் மாவட்டம், மூலனூர் அருகே உள்ள சொந்த கிராமமான புதுக்கோட்டைக்கு ஜன. 13ஆம் தேதி சென்றார். பொங்கல் பண்டிகைக்கு பிறகு, 18ஆம் தேதி வீடு திரும்பியபோது, வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது, பீரோவில் வைத்திருந்த 50 பவுன் தங்க நகைகள், 4.5 கிலோ வெள்ளிப் பொருள்கள் திருட்டு போனது தெரியவந்தது.

புகாரின் பேரில், கிருஷ்ணகிரி வட்ட போலீஸார், வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பெ.தங்கதுரை உத்தரவின் பேரில், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் ராமச்சந்திரன் (கிருஷ்ணகிரி), முத்துகிருஷ்ணன் (பர்கூர்) ஆகியோர் தலைமையில் காவல் ஆய்வாளர்கள் மணிமாறன், அன்பழகன் ஆகியோர் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டது.

இந்ததனிப்படையினர்,குற்றச்சம்பவம் நிகழ்ந்த பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வுசெய்தனர். அதில், திருட்டுச்ச சம்பவத்தில் ஈடுபட்டது கரூர் மாவட்டம், பசுபதி பாளையத்தைச் சேர்ந்த விஜய் (எ) சுரேஷ் (45) என்பதும், இவர் தற்போது சேலம் மாவட்டம் தாதகம்பட்டியில் வசித்து வந்ததும் தெரிந்தது. இதையடுத்து தனிப்படை போலீஸார் சேலம் சென்று, விஜயை கைதுசெய்து, அவரிடமிருந்து 50 சவரன் தங்க நகைகளை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து, இந்த குற்றச் சம்பவத்தில் சிறப்பாக பணிபுரிந்த தனிப்படை காவலர்களை பாராட்டி, வெகுமதிகளை வழங்கினார். அப்போது, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சங்கர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# ஆம்பூர் அருகே மது போதையில் நண்பர்களிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் அடித்துக் கொலை!

ஆம்பூர்.பிப்.3

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மாதனூர் அரசு மதுபான கடை அருகே மாதனூர் ஒடுகத்தூர் செல்லும் சாலையில் உள்ள மதுபான கடையில் சாமிநாதபுரம் பகுதியை சேர்ந்த அப்புனு மற்றும் கோகுல் ஆகிய இருவரும் மது பாட்டில் வாங்கி சென்று அரசு ஆரம்ப சுகாதார நிலையம் எதிரில் உள்ள கடை அருகில் அமர்ந்து மது அருந்தி கொண்டு இருந்துள்ளனர்.அப்போது போதை தலைக்கேறி இருவருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இருவரும் மாறி மாறி தாக்கி கொண்டு பின்னர் கோகுல் அங்கிருந்த இரும்பு ட்ரம் மற்றும் பிளேட்டால் அப்புனு தலை மீது போட்டு கொடூரமாக தாக்கியதில் அப்புனு தலை நசிங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு ஆம்பூர் கிராமிய போலீசார் விரைந்து சென்று பிரேதத்தை கைபற்றி பிரேத பரி



சோதனைக்காக வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து ஆம்பூர் கிராமிய போலீசார் வழக்கு பதிவு செய்து மது போதையில் நண்பனை கொலை செய்த அதே பகுதியை சேர்ந்த கோகுல் என்ற இளைஞரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கோகுல் மீது ஏற்கனவே கஞ்சா மற்றும் கள்ளத்துப்பாக்கி வழக்கு நிலுவையில் உள்ளதாக கூறப்படுகிறது.

# 'ஜீப் 2.0' திட்டத்தின் மையமாக இந்தியா: உற்பத்தி, ஏற்றுமதி, வாடிக்கையாளர் நம்பிக்கையை ஜீப் உறுதி!

சென்னை,பிப்.3



85 ஆண்டுகால உலக பாரம்பரியம் கொண்ட ஜீப்® SUV பிராண்ட், தனது 'ஜீப் 2.0' ஸ்ட்ராடஜிக் திட்டத்தின் மையமாக இந்தியா அறிவித்து, ஆசியாபசிபிக் வளர்ச்சியில் இந்தியாவின் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. ரஞ்சன்கான் உற்பத்தி ஆலை மற்றும் வலுவான உள்ளூர் மதிப்புச் சங்கிலி ஆதாரமாக கொண்டு, இந்தியாவை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக மாற்றும் நோக்குடன் நிறுவனம் செயல்படுகிறது. பிராண்டின் பாரம்பரியம், திறன், மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை மையப்படுத்திய நீண்ட காலத் திட்டம் 'ஜீப் 2.0'.

இந்தத் திட்டம் உள்நாட்டு பாகங்கள் தயாரிப்பு 90% வரை உயர்த்துவது, உலகத்தரம் வாய்ந்த புதிய மாடல்களை அறிமுகப்படுத்துவது, ஏற்றுமதியை ஆப்பிரிக்கா மற்றும் வட அமெரிக்கா வரை விரிவுபடுத்துவது, மற்றும் விற்பனைக்கு பிந்தைய சேவைகளை வலுப்படுத்துவது போன்ற ஆறு முக்கிய தூண்களை கொண்டுள்ளது. தற்போது 70 நகரங்களில் 85க்கும் மேற்பட்ட விற்பனை மற்றும் சேவை மையங்கள் செயல்படும் ஜீப், 'கான்ஃபிடன்ஸ் 7' போன்ற திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர் நம்பிக்கையை அதிகரித்து வருகிறது. ஸ்டெல்லாண்டிஸ் இந்தியாவின் தலைமை செயல் அதிகாரி மற்றும் மேலாண்மை இயக்குநர் சைலேஷ் ஹஸேலா கூறுகையில், "ஜீப் பிராண்ட் 85 ஆண்டு கால பாரம்பரியம் அதன் நம்பகத்தன்மை மற்றும் சாகச மனப்பான்மையில் தான் உள்ளது. 'ஜீப் 2.0' மூலம் உள்நாட்டு உற்பத்தி, புதிய தயாரிப்புகள், மற்றும் வாடிக்கையாளர் சேவையில் தனித்துவத்தை உருவாக்கி, இந்தியர்களின் விருப்பமான SUV பிராண்டாக ஜீப்பை நிலை நிறுத்துவோம்," என்றார்.

# உளுந்தூர்பேட்டை பியூலா மெட்ரிகுலேஷன் பள்ளியில் மாபெரும் உணவு திருவிழா!



உளுந்தூர்பேட்டை,பிப்.3

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை கந்தசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள பியூலா மெட்ரிகுலேஷன் பள்ளியில் மாபெரும் உணவு திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பள்ளியின் முதல்வர் கிஷோர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த உணவு திருவிழா, அனைத்து துறை ஆசிரியர்களின் ஒருங்கிணைப்புடன் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாவில் கேழ்வரகு, கம்பு, தினை உள்ளிட்ட சிறுதானிய உணவுகள், பல்வேறு பழ வகைகள், காய்கறி உணவுகள், மேலும் நம் முன்னோர்கள் பயன்படுத்திய பாரம்பரிய உணவு வகைகள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, மாணவர்கள் ஒவ்வொரு உணவு வகையின் சத்தான தன்மை, நன்மை–தீமைகள், மேலும் நம் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய உணவு பழக்கங்கள் குறித்து பார்வையாளர்களுக்கு தெளிவாகவும் சிறப்பாகவும் விளக்கினர். மாணவர்களின் விளக்கங்கள் அனைவரையும் பெரிதும் கவர்ந்தன. இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை ஆசிரியர்கள், மனிதம் காப்போம் அறக்கட்டளையின் கள்ளக்குறிச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விஜய் செல்வா, மேலும் ஏராளமான பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு உணவுகளை வாங்கி உண்டு மகிழ்ந்தனர். இந்த உணவு திருவிழா, மாணவர்களிடையே ஆரோக்கிய உணவின் முக்கியத்துவம், சிறுதானியங்களின் அவசியம், பாரம்பரிய உணவு கலாச்சாரம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் ஒரு பயனுள்ள நிகழ்ச்சியாக அமைந்தது என பங்கேற்பாளர்கள் பாராட்டினர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர், அடுத்த மாடப்பள்ளி பகுதியில் அண்ணா பிற்படுத்தப் பட்டோர் முன்னேற்ற கழகம் சார்பாக கண் சிகிச்சை முகாம் மற்றும் ஊனமுற்றோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நடந்தது. இதில் அண்ணா பிற்படுத்தப் பட்டோர் முன்னேற்றக் கழக தலைவர் அண்ணா அருணகிரி தலைமை வகித்தார்.சுமார்500க்கும்மேற்பட்டோருக்குகண்சிகிச்சைமற்றும்மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதற்கு உரிய ஏற்பாடுகளை அண்ணா அறக்கட்டளை திருப்பத்தூர் சேர்மம் அண்ணாதுரை கவுண்டர் அவர் நினைவாகவும் மற்றும் அண்ணா பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்ற கழகத்தினர் செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியில் டாக்டர் அகர்வால்தலைமையில்மருத்துவக்குழுவினர்பரிசோதனைசெய்துஉரியபயனாளிகளுக்கு இலவச கண்ணாடிகளை வழங்கினர்.

# மருத்துவ அவசர நிலைகள் நகர்ப்புறங்களில் தனிநபர் கடனுக்கான முக்கிய காரணம்: Paisabazaar ஆய்வு !

சென்னை,பிப்.3

சென்னை மருத்துவ அவசர நிலைகள் நகர்ப்புற இந்தியர்களின் தனிநபர் கடன் எடுப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக இருப்பதாக Paisabazaar வெளியிட்ட "The Personal Loan Story" ஆய்வு தெரிவிக்கிறது. இந்தியாவில் 11% பேர் மருத்துவச் செலவுகளுக்கு தனிநபர் கடன் எடுத்துள்ளனர்; Tier1 நகரங்களில் இது 14% ஆக உயர்கிறது. குறைந்த மருத்துவ காப்பீட்டு பயன்பாடு மற்றும் அதிகரித்த சிகிச்சை செலவுகள் அதற்கு காரணமாக இருப்பதாக ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. 23 நகரங்கள்/பட்டணங்களில் 2,889 கடனாளர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. அத்தியாவசிய தினசரி செலவுகள், அவசர வீட்டு பழுது பார்ப்பு, திருமணம்/விழாக்கால செலவுகள் ஆகியவை மற்ற முக்கிய காரணங்களாகும். 48% பேர் அவசியத் தேவைகளுக்காகவும், 36% பேர் ஆசைப் பேரார்வங்களுக்காகவும், 16% பேர் வணிக முதலீடு களுக்காகவும் கடன் எடுத்துள்ளனர். Tier3 நகரங்களில் உள்ளவர்கள், Tier1ஐ விட 2.4 மடங்கு அதிகமாக தினசரி தேவைகளுக்காக கடன் பெறுகின்றனர். ஆண்டு வருமானம் ₹7.5–10 லட்சம் உள்ள நடுத்தர வர்க்கத்தில் 40% பேர் வாழ்க்கை முறை செலவுகளுக்காக கடன் பெறுவது குறிப்பிடத்தக்கது. ஆன்லைன் வசதி இருந்தும், 32% பேர் மட்டுமே ஆன்லைன் கடன் பெற்றுள்ளனர்; Gen Zஇல் 31% பேர் மாற்று விருப்பங்களை மதிப்பீடு செய்யாமல் உடனடி கடன் எடுப்பது கவனிக்கப்படுகிறது. Paisabazaar நிறுவனத்தின் CEO சந்தோஷ் அகர்வால் கூறுகையில், "இன்றைய கடன் முடிவுகள் வட்டி விகிதம் அல்லது தகுதி மற்றும்; வாழ்க்கை நிகழ்வுகள், அவசரம், மற்றும் ஆசைகள் போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



## காட்டம்பட்டி கிராமத்தில்

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா; திரளான பக்தர்கள் சாமி தரிசனம்!

தர்மபுரி,பிப்.3

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே உள்ள காட்டம்பட்டி கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா வெகு விமர்சையாக நடந்தது,

நேற்று முன்தினம் கணபதி பூஜையுடன் தொடங்கியது. இன்று அதிகாலை முதலே கலச ஆராதனை, நவகிரக ஹோமம், பஞ்ச சூக்தஹோமம், துர்கா சகஸ்ரநாமம், மகா சாந்திஹோமம், வேதபாராயணம், பூர்ணாஹுதி நடைப்பெற்றது.

இதையடுத்து யாகசாலையிலிருந்து புனித நீர் கலச தீர்த்தம் மற்றும் பால் குடத்தை கோவில் முக்கியஸ்தர்கள் தங்கள் தலைமீது எடுத்து சென்று கோயில் கலசத்திற்கு புனித நீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகம் செய்து திருக்குட நன்னீராட்டு செய்து தீபாரதனை காட்டினார்.

பின்னர் கலசத்திற்கு ஊற்றிய புனித நீர் பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. இதனையடுத்து ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு பல்வேறு அபிஷேகங்கள் செய்து பின்பு பூக்களால் அலங்கரித்து மகா தீபாரதனை காட்டப்பட்டது. ஸ்ரீமுத்துமாரியம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இந்தவிழாவையொட்டி பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் ஊர்கவுண்டர் சின்னசாமி, மந்திரிகவுண்டர், பெரியசாமி, கோல்காரன் மனோகரன் முன்னாள் கவுன்சிலர் முத்தப்பன், மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் காட்டம்பட்டி ஊர்பொது மக்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவிற்க்கான ஏற்பாடுகளை கோயில் பங்காளிகள் மற்றும் விழாக்குழுவினர் செய்திருந்தனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வாக்காளர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் செயல்முறை குறித்த விழிப்புணர்வு நடமாடும் செயல்முறை வாகனத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கி. அரிதாஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், தனி வட்டாட்சியர் (தேர்தல்) கனேஷ், விழுப்புரம் வருவாய் வட்டாட்சியர் மகாதேவன் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு கொங்காலம்மன் கோவில் தேரோட்டம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர்!



ஈரோடு,பிப்.3

ஈரோட்டின்காவல்தெய்வமான கொங்காலம்மன் திருக்கோவில் தேரோட்டம் தைப்பூசத் திருநாளையொட்டி நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. தைப்பூச நன்னாளையொட்டி அதிகாலையிலேயே அம்மனுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மன் எழுந்தருளினார். இந்தத் தேரோட்டத்தில் ஆண்களும் பெண்களும் எனப் பெரும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பக்தி கோஷங்களுடன் தேரை வடம் பிடித்து இழுத்து தைப்பூச முருகனையும் அம்மனையும் மனமுருக வழிபட்டனர். இந்நிகழ்வில் கொங்காலம்மன் கோவில் அறங்காவலர் குழு தலைவர் சத்தியமூர்த்தி, உறுப்பினர்கள் குணசேகர், உமா தண்டபாணி, அய்யாவு, வெற்றிவேல் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை செயல் அலுவலர் திலகவதி, சரக ஆய்வாளர் ஆதிரை உள்ளிட்ட அரசு அலுவலர்கள், அனைத்து அரசியல் கட்சியினர் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்றனர். கோவிலில் இருந்து புறப்பட்ட தேரானது பெரியார் மன்றம், பொன் வீதி மற்றும் நேதாஜி வீதி வழியாக வீதியுலா வந்து மீண்டும் கோவிலை வந்தடைந்தது.

விழாவிற்கான ஏற்பாடுகளைக் கோவில் நிர்வாகத்தினர் மற்றும் அறநிலையத்துறையினர் செய்திருந்தனர்.



திருவெண்ணைநல்லூர் அருகே உள்ள அரசூர் கூட்ரோடு காவல் உதவி மையம் அருகே தைப்பூசத் திருநாளை முன்னிட்டு, முருகப்பெருமானுக்கு நன்றி செலுத்தும் விதமாகத் அரசூர் கோ. முரளி கிருஷ்ணன் ஏற்பாட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

# கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய தேமுதிக சார்பாக 3ம் ஆண்டு தைப்பூச திருவிழாவில் அன்னதானம்!



கிருஷ்ணகிரி பிப்.3

தைப்பூச திருவிழாவை முன்னிட்டு உலகெங்கும் பல்வேறு முருகர் ஆலயங்களில் பக்தர்கள் வழிபாடு செய்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரியில் மிகவும் பிரசித்தி பெற்ற காட்டினாம்பட்டி பாலமுருகன் சுவாமி ஆலயம் உள்ளது. இன்று தைப்பூசத் திருவிழா என்பதால் லட்சக்கணக்கான பக்தர்கள் இந்த கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்தனர். ஏராளமான பக்தர்கள்காவடி எடுத்து அரோகரா அரோகரா என்ற கோஷத்துடன் முருகர் ஆலயத்துக்கு வந்து செல்கின்றனர். ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பசியினை போக்கும் வகையில், தேமுதிக கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் மூன்றாம் ஆண்டு தைப்பூச அன்னதான நிகழ்ச்சி தேமுதிக கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.சின்னராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக துணை செயலாளர் ஆர்.சண்முகம் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட கழகப் பொருளாளர் வி.லட்சுமணன், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும்,கிருஷ்ணகிரிகிழக்குஒன்றியகழகசெயலாளருமான எம்.முருகன், மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சி.வஜ்ரவேல், காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் விஜய் வல்லரசு, மாவட்ட இளைஞரணி செயலாளர் பி.சி.கனகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட நிர்வாகி பார்க்சிவா, விநாயக பைனான்ஸ் கோவிந்தராஜ், வாசு, சென்ராயன், முருகன், திம்மராயன், திருப்பதி, கோவிந்தன், பழனிராகவன், பச்சையப்பன், கிட்டோராமசாமி, பெரியசாமி, குமார், சந்திரகுமார், செல்வகுமார், ரவி, மாதையன், மற்றும் தமிழக கட்டிட தொழிலாளர் மத்திய சங்கம் இணைந்து இந்த அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்த அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# கல்வி கற்பதோட நல்ல பழக்க வழக்கங்கள், நல்ல பண்புகளை கற்க வேண்டும்!

## உயர் நீதிமன்ற நீதிபதி.எஸ்.கே.கிருஷ்ணன் மாணவர்களுக்கு அறிவுரை!!



வாணியம்பாடி, பிப்.3

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 26 ஆம் ஆண்டு விழா பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி நிறுவனரும்தாளாளருமான டாக்டர் எம்.செந்தில் குமார் தலைமை வகித்தார். தாளாளரின் செயலாளர் எஸ்.கே. ஷபானா பேகம் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.கே.கிருஷ்ணன் கலந்து கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கும், பாடவாரியாக 100% மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், 100% தேர்வு முடிவுகளை பெற்று தந்த ஆசிரியைகள் ஆகியோருக்கு நினைவு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது

இளமை காலம் என்பது ஒவ்வொரு உடைய வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு காலமாகும். இளமையில் நீங்கள் எல்லாம் கல்வியை கற்பதற்காக இந்த பள்ளியில் சேர்ந்திருக்கிறீர்கள். கல்வி கற்பதோட நல்ல பழக்க வழக்கங்கள், நல்ல பண்புகளை கற்க வேண்டும். அப்போது வாழ்க்கையும் சிறப்பாக அமையும். இளைஞர்களை நம்பி தான் இந்த நாடும், சமுதாயமும் இருக்கிறது. பிற்காலத்தில் நீங்கள் உங்களுடைய கடமையை ஆற்ற வேண்டும் என்றால் கல்வி பயன்படுகிறது. அப்படி நாடினால் தான் உங்களுடைய பாரம்பரியத்தை நீங்கள் தெரிந்து கொள்ளமுடியும்என்று பேசினார்.

நிகழ்ச்சியில் ஆதர்ஷ் எலைட் சர்வதேச பள்ளி முதல்வர் பரிதா பேகம், பள்ளி ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் பள்ளி நிர்வாக முதல்வர் வி.சத்தியகலா நன்றி கூறினார்.

# ஆம்பூர் அருகே 8 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு!

## 64 வயது முதியவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது!



ஆம்பூர். பிப்.3

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தோட்டாளம், பொன்நகர் பகுதியை சேர்ந்தவர் செல்வம் ( வயது 64).இவர் அதே பகுதி வீதியில் விளையாடிக்கொ ண்டிருந்த 8 வயது சிறுமிக்கு தின்பண்டங்கள் கொடுத்து வீட்டிற்குள் அழைத்து சென்று பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். சம்பவம் குறித்து சிறுமியின் தந்தை ஆம்பூர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் அனைத்து மகளிர் போலீசார் வழக்குபதிவு செய்த 8 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு அளித்த செல்வம் கைது செய்து அவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். வீதியில் விளையாடிக்கொண்டிருந்த 8 வயது சிறுமிக்கு 64 வயது முதியவர் பாலியல் தொந்தரவு கொடுத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் விழுப்புரம் மாவட்டத்தில் எதிர் வரும் நாட்களில் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகைபுரிவதையொட்டி, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஜெ.இ.பத்மஜா, திண்டிவனம் சார் ஆட்சியர் அ.ல.ஆகாஷ் உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன், உட்பட பலர் உள்ளனர்.

# ஒசூர் ஸ்ரீ வேல்முருகன் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா!

## பால்குடம், காவடி எடுத்து பக்தர்கள் நேர்த்திக்கடன்; ராஜா அலங்காரத்தில் அருள் காட்சி தந்த முருகப்பெருமான்!!



ஒசூர்,பிப்.3

முருகப்பெருமானின் முக்கிய திருவிழாவான தைப்பூசத் திருநாள் இன்று உலகெங்கும் உள்ள முருகன் ஆலயங்களில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பெரியார் நகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ வேல்முருகன் திருக்கோயிலில், தைப்பூசத் திருவிழா மிக விமர்சையாக நடைபெற்றது.

விழாவை முன்னிட்டு, இன்று அதிகாலை முதலே மூலவர் முருகப்பெருமானுக்கு பால், தயிர், வெண்ணெய், மஞ்சள், குங்குமம், சந்தனம், திருநீறு மற்றும் பன்னீர் உள்ளிட்ட பல்வேறு நறுமண திரவியங்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டன.

அபிஷேகத்தைத் தொடர்ந்து, முருகப் பெருமானுக்கு சந்தனம் மற்றும் வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டன. பின்னர், எம்பெருமான் "ராஜ அலங்காரத்தில்" பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதனைத் தொடர்ந்து, மகா பஞ்சமுக தீப ஆராதனை மற்றும் மங்கள ஆரத்தி வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவில் ஒசூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். முக்கிய நிகழ்வாக, 108 பேர் சுமார் 5,000 லிட்டர் பாலுடன் பக்தர்கள் பால்குடம் எடுத்து வந்து முருகனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர்.

முருகனின் அருளைப் பெற ஏராளமான பக்தர்கள் காவடிகள் எடுத்து வந்து தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றினர்.

பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று "ஆரோகரா" கோஷத்துடன் முருகப்பெருமானை தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் மற்றும் பெரியார் நகர் பகுதி பொதுமக்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



# அம்பலூர் அரசு பள்ளியில் இலவச சைக்கிள்களை தேவராஜ் எம். எல். ஏ. வழங்கினார்!

வாணியம்பாடி பிப்.3

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அருகே உள்ள அம்பலூர்அரசு மேல் நிலைப்பள்ளியில்.தமிழ்நாடு அரசின் இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது .

இதில் சிறப்பு அழைப்பாளராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி கலந்து கொண்டு மாணவர்களுக்கு இலவசமிதிவண்டிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார். இதில் ஒன்றிய குழுத்தலைவர் வென்மதி முனிசாமி சிங்காரவேலன் ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன்ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணமூர்த்தி ஒன்றியக்குழு துணைத்தலைவர் தேவராஜி ஒன்றிய கவுன்சிலர் சத்திராஜாசெந்தில் குமார் தலைமை ஆசிரியர் பொறுப்பு ரொசாரியா, ஒன்றிய நிர்வாகிகள், தருமராஜன், வெங்கடேசன் மு.மாணவர் சங்க நிர்வாகிகள். பாபு, N. பாலசுப்பிரமணி, M மூர்த்தி. மனோகரன், பத்மா. ஞானசேகரன் ,தினகரன்,கல்விக்குழு B.ராஜ்குமார்,மற்றும் கட்சி நிர்வாகிகள், ஆசிரியர்கள்,மாணவர் கள்,பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாலக்கோட்டில் பா.ம.க. சார்பில் காடுவெட்டி குரு 65 வது பிறந்தநாள் விழா!



பாலக்கோடு,பிப்.3

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பேருந்து நிலையம் முன்பு பாமக

நகர செயலாளர் ராஜசேகர் தலைமையில் காடுவெட்டி குரு 65 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு பாமக நிர்வாகிள் சேகர், ராஜவேல், ராஜா, கிருஷ்ணன், சரவணகுமாரி, பாலமுரளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பஸ் நிலையத்தின் முன்பு வைக்கப்பட்டிருந்த முன்னாள் வன்னியர் சங்க தலைவர் காடுவெட்டி குரு அவர்களின் திருவுருவ படத்திற்க்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதையடுத்து தொண்டர்கள் பட்டாசு வெடித்தும் , இனிப்பு வழங்கியும் கொண்டாடினார்.

இந் நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் துரை, சரவணன், மாதையன், துரை, ஏழுகுண்டன், மற்றும் முன்னாள் மாவட்ட உழவர் பேரியக்க தலைவர் சின்னசாமி, நகர தலைவர் ராஜா, நிர்வாகிகள் ரத்தினம், சந்தோஷ், நாகராஜ், ரவி, ஜெகதீஸ், கார்த்திக், சீனி, பாலாஜி உள்ளிட்ட கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், மத்தூர் ஒன்றியம், மத்தூரில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தனர், இதை தொடர்ந்து மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அவர்களின் இல்லம் சென்று அவரது தந்தை, முன்னாள் ஒன்றிய தலைவர் மற்றும் ஒன்றிய கழக செயலாளர் பொன்.குணசேகரன் திருவுருவ படத்திற்கும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி. மற்றும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான.தே. மதியழகன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். ஒன்றிய செயலாளர் வசந்த்ரசு உடன் மாவட்ட, மாநில நிர்வாகிகள், ஒன்றிய ,நகர,பேரூர் கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள், முன்னால் ஊராட்சி மன்ற தலைவர்கள்,துணை தலைவர்கள், அணைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழக நிர்வாகிகள்,கழக மூத்தமுன்னோடிகள், கழக தொண்டர்கள் என அனைவரும் கலந்துக்கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சி வார்டு 36வது வார்டு நேதாஜி நகர் பகுதியை சேர்ந்த அம்மா பேரவை முன்னாள் பொருளாளர் நிசார் அஹமது தலைமையில் பல்வேறு கட்சிகளை சேர்ந்த சுமார் 50 பேர் திமுக நகர செயலாளர் வி.எஸ்.சாரதி குமார் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். புதியதாக கட்சியில் இணைந்தவர்களுக்கு நகர செயலாளர் சாரதி குமார் கட்சி சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்ச்சியில் திமுக நகர துணை செயலாளர்கள் கே.தென்னரசு, குபேந்திரன், மாவட்ட பிரதிநிதி ஜெ.ரவி, ஜன்மஜெயம், சிரஞ்சீவி, விஜி மற்றும் பலர் உடன் இருந்தனர்.

## வாணியம்பாடி சிகரம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி 19 ஆம் ஆண்டு விழா!



வாணியம்பாடி, பிப்.3

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சிகரம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் சிகரம் சங்கமம் – 2026 என்ற பெயரில் 19ஆம் ஆண்டு விழா பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி செயலாளர் முனைவர்டி.வெற்றிவேலன்தலைமை வகித்தார். பள்ளியின் தலைவர் கே. எம்.கிருஷ்ணன், இணைச்செயலாளர் டி.பார்த்திபன், இ.வேலு, பொருளாளர் வி.எஸ்.சூரிய ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி முதல்வர் ஜெ.குமார் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பி.கோவிந்தராஜு கலந்து கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கும், பாடவாரியாக 100% மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், 100% தேர்வு முடிவுகளை பெற்று தந்த ஆசிரியர்கள் ஆகியோருக்கு ரொக்க பரிசுகளை வழங்கி வாழ்த்தி பேசினார்.

இதில் கௌரவ விருந்தினராக வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் ஜெ.அஜிதா பேகம், சிறப்பு விருந்தினராக திருப்பத்தூர் மாவட்ட தனியார் பள்ளிகள் சங்க தலைவரும் நாட்றம்பள்ளி பிருந்தாவன் மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகியுமான ஜி. அசோகன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துறை வழங்கினர். இதனை தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்சி கலந்து கொண்ட அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.

நிகழ்ச்சியில் ஏர்ஃபோர்ஸ் எஸ். மணி, ஆர்.மணிவண்ணன் உட்பட பள்ளி நிர்வாகிகள், அறக்கட்டளை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள், அலுவலக பணியாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி துணை முதல்வர் வி. பவித்ரா நன்றி கூறினார்.



பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகளில் குடியிருப்புவாசிகள் தரும் தகவல்களின் அடிப்படையில், ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றும் சேவை நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 129க்குட்பட்ட பாரதி தெருவில் உள்ள ஒரு வீட்டிலிருந்து மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றப்பட்டன.

### கள்ளக்குறிச்சி அருகே

## கோமுகி ஆற்றில் முதியவர் பிணம்!

கள்ளக்குறிச்சி, பிப்.3–

கச்சிராயப்பாளையம் அடுத்த அக்கராயப்பாளையம் பொட்டியம் சாலையின் குறுக்கே உள்ள கோமுகி ஆற்றில் நேற்று மதியம் 80 வயது முதியவர் பிணமாக மிதந்தார். இதைபார்த்து அதிர்ச்சியடைந்த அவ்வழியாக சென்றவர்கள் இதுபற்றி கச்சிராயப்பாளையம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, கள்ளக்குறிச்சி தீயணைப்புத் துறை வீரர்கள் உதவியுடன் ஆற்றில் இறங்கி முதியவரின் உடலை கைப்பற்றி, அவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என அக்கம் பக்கத்தினரிடம் விசாரணை நடத்தினர். அப்போது ஆற்றில் மர்மமான முறையில் இறந்து கிடந்த முதியவர் கச்சிராயப்பாளையம் குளத்து மேட்டு பகுதியைச் சேர்ந்த செங்கான் (வயது 80) என்பதும், கடந்த சில நாட்களுக்குமுன்பு வீட்டைவிட்டு வெளியே தெரியவந்தது. இதையடுத்து முதியவர் உடல் பிரேத பரி சோதனைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுகுறித்த புகாரின் பேரில் கச்சிராபாளையம் போலீசார் வழக்குப் பதிவு செய்து, செங்கான் ஆற்றில் தவறிவிழுந்து தண்ணீரில் மூழ்கி இறந்தாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என விசாரணை நடத்தி வருகிறார்கள்.



தைப்பூசத்திருவிழாவையொட்டிஅவிநாசிலிங்கேஸ்வரர் கோயிலில் சுப்பிரமணியர் தேரோட்டம் (மழலையர் தேர்) ரறறறநடைபெற்றது.

### வள்ளலார் நினைவு தினத்தில்

## அரூரில் தடையை மீறி இறைச்சி கடைகள் திறப்பு!

### சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு!!

அரூர், பிப்.3–

தமிழகத்தில் காந்தி ஜெயந்தி வள்ளலார் தினம் மகாவீரர் ஜெயந்தி உள்ளிட்ட நாட்களில் இறைச்சி விற்பனைக்கு தடை விதிப்பதுடன் மதுபான கடைகள் செயல்படக் கூடாது என்ற உத்தரவு உள்ளது இதையடுத்து வள்ளலார் நினைவு தினத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து மதுபானம் மற்றும் இறைச்சி கடைகளை திறக்க கூடாது என அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் அரசின் உத்தரவையும் மீறி தர்மபுரி மாவட்டம் அரூர் பேருந்து நிலையம் வர்ண தீர்த்தம் பாட்சாப்பேட்டை திருவிக நகர் சந்தைமேடு உள்ளிட்ட இடங்களில் மாடு ஆடு கோழி மற்றும் மீன் ஆகிய இறைச்சி கடைகள் வழக்கம்

போல் இயங்கினர் என்றும் இவற்றை சுகாதார த்துறையினர் கண்டு கொள்ளவில்லை என்றும் அப்பகுதி சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டினர். மேலும் சந்து கடைகளில்மதுபாட்டில்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாககூறப்படுகிறது.

## பயணியிடம் பணம் திருடிய வாலிபர் கைது!

கோவை,பிப்.3

கோவை காந்திபுரத்தை சேர்ந்தவர் ஜோதி வேல்(37) இவர் தனது தந்தை மற்றும் மாமனாருடன் வெளியூர் சென்று விட்டு கோவை திரும்பினார்,

அவர்கள்பஸ்சைவிட்டு இறங்கும் போது வாலிபர் ஒருவர் திடீரென்று ஜோதி வேல் பாக்கெட்டில் இருந்த செல்போன் மற்றும் ரூ.3 ஆயிரத்தை நைசாக திருடினார்.

அதை பார்த்து அதிர்ச்சி அடைந்த ஜோதிவேல் திருடன் திருடன் என்று சத்தம்போட்டார், உடனே அந்த வாலிபர்

அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்அவரை அக்கம் பக்கத்தில் இருந்த பயணிகள் விரட்டிச் சென்று பிடித்து காட்டூர் போலீசில் ஒப்படைத்தனர் போலீசார் நடத்திய விசாரணையில் அவர் சிவகங்கையை சேர்ந்த அருண் பிரகாஷ் (32) என்பது தெரிய வந்தது,

அந்த வாலிபரை போலீசார் கைதுசெய்தனர், அவரிடம்இருந்துசெல்போன், மற்றும் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

## கோஷ்டி மோதல்; 2 வாலிபர்கள் படுகாயம்!

### த.வெ.க.நிர்வாகி, 20 பேர் மீது வழக்கு!!

தம்மம்பட்டி, பிப். 3–

கெங்கவல்லி அருகே, தெடாவூர் பகுதியில், தைப்பூச விழாவின் போது, ஒரு தரப்பினர் அவிழ்த்து விடப்பட்ட காளை,மற்றொரு தரப்பைச் சேர்ந்த அஜய் என்பவரது பைக் மீது மோதியதில், பைக் சேதமடைந்தது. பைக் சேதமானது குறித்து, மற்றொரு தரப்பினர், காளையை அவிழ்த்து விட்ட தர ப்பினரிடம் கேட்டனர். அப்போது, பைக் சேதத்திற்கு உரிய தொகை தருவதாக கூறிய போதும்,இரு தரப்பினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின், ஒருவரை ஒருவர் விரட்டிச் சென்று, ஆத்தூர், பெரம்பலூர் தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் தாக்கிக் கொண்டனர். இதில், ஒருதரப்பைச் சேர்ந்த பார்த்திபன் (20) காமேஷ்(19) ஆகியோர் படுகாயமடைந்ததால், கெங்கவல்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.இவர்கள்அளித்த புகாரில்,மற்றொருதரப்பைச் சேர்ந்த தெடாவூர் த.வெ.க., பேரூர் செயலாளர் அருண், மணிகண்டன் உள்பட 20 பேர் மீது வன்கொடுமை வழக்குப் பதிவு செய்தனர். இதில், மணிகண்டன் (20)என்பவரை போலீசார் கைது செய்து விசாரிக்கின்றனர்.



கோயம்புத்தூர்மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு எண்.67க்குட்பட்ட இரங்கநாதபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ரூ.83.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட (ARVR Lab) ஆய்வகத்தினை கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார் , திறந்து வைத்தார்கள். உடன் மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் , மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன் , உதவிஆணையர்செல்வி.நித்யா,செயற்பொறியாளர்கருப்பசாமி,உதவிசெயற்பொறியாளர் குமரேசன்,மாமன்றஉறுப்பினர்வித்யாராமநாதன்,மண்டலசுகாதாரஅலுவலர்குணசேகரன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

## தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் திருக்குரான் திறனாய்வுப் போட்டி!



தென்காசி பிப்.3

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கடையநல்லூர் டவுண் கிளை சார்பில் திருக்குர்ஆன் திறனாய்வு போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி மற்றும் மார்க்க விளக்க கூட்டம் கிளைத் தலைவர் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது

இக் கூட்டத்தில் TNTJ பேச்சாளர் இல்யாஸ் M.I.Sc கலந்துகொண்டு கற்போம் ! கற்பிப்போம்! என்கிற தலைப்பிலும்,சகோ.ரஃபீக் ராஜா ரமலானை வரவேற்போம்

என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர் அப்துல் ஸலாம் மற்றும் மாவட்ட செயலாளர் ஜலாலுதீன் பொருளாளர் அன்வர் சாதிக் துணைச் செயலாளர்கள் பிலால்,அப்துல் பாசித் ,குட்டி அப்துல் லாஹ், ஆகியோர் முன்னிலை வகித்தனர் இக்கூட்டத்தில் கீழ்காணும் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தமிழக முதல்வர் அவர்கள் சமீபத்திய முஸ்லீம் லீக் மாநாட்டில் இஸ்லாமியர் நலன் கருதி 5 அறிவிப்புகளை செய்து , சந்தோஷமா எனும் கேள்வியையும் கேட்டுள்ளார், இஸ்லாமிய சமுதாயத்தை பொறுத்த வரையில் இந்த அறிவிப்புகளை "யானைப்பசிக்கு சோளப் பொறி" எனும் நோக்கில் தான் பார்க்கிறது, இஸ்லாமியர்களின் இட ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் எனும் கோரிக்கை பன்னெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்க அதைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை என்பது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கின்றது, இஸ்லாமிய சமூகம், கல்வி , வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாராத்தில் உயர இட ஒதுக்கீட்டை அதிகரிப்பதுதான் ஒரே தீர்வு ஆகவெ வரும் தேர்தலுக்கு முன் இடஒதுக்கீடு அதிகரிப்பு, நீண்டகால முஸ்லீம் சிறைவாசிகளின் விடுதலை உள்ளிட்ட அறிவிப்புகளை திராவிட முன்னேற்ற கழக அரசு செய்ய வேண்டும் என இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கின்றோம்.



சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்தில் அகற்றப்பட்ட கட்டட இடிபாட்டுக் கழிவுகள், வார்டு120, லாயிட்ஸ் காலனியில் உள்ள சேகரிப்பு மையத்தில் சேகரிக்கப்பட்டுபின்னர்இங்கிருந்துபெருங்குடிசெயலாக்கமையத்திற்குஅனுப்பப்பட்டது.

## ஸ்ரீ புதூர் பொன்மாரியம்மன்கோயில் திருவிழாவை முன்னிட்டு விழா குழு தலைவர் தேர்வு!



தர்மபுரி,பிப்.3

தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் பௌர்னமியை முன்னிட்டு ஶ்ரீ புதூர் பொன்மாரியம்மன் கோயில் திருவிழா நடப்பது வழக்கம். 12 ஊர் கிராம மக்கள் இணைந்து நடத்தும் இத்திருவிழாவானது,

வரும் 23ம் தேதி முதல் 27ம் தேதி வரை 5 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது.

ஒவ்வொரு வருடமும் திருவிழா சிறப்பாக நடத்தும் வகையில் கோயில் நிர்வாக குழு அமைக்கப்பட்டு தலைவர்கள் மற்றும் நிர்வகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்,

இவர்கள் விழா சிறப்பாக நடத்தும் வகையில் அனைத்து அனைத்து கிராம நிர்வாகிகள், அனைத்து சமுகத்தினருடன் இனைந்துவிழாவிற்க்கானஏற்பாடுகளை செய்வர்.

அந்த வகையில் இந்த ஆண்டு கோயில் திருவிழாநடத்தநிர்வாககுழுதலைவராக பாலக்கோடு பேரூராட்சி கவுன்சிலர் மோகன் தேர்ந்தெடுக்கப்ப ட்டார். அவருக்கு இதில் சித்திரப்பட்டி ஊர்கவுண்டர், மந்திரிகவுண்டர் மற்றும் ஊர் பெரியோர்கள் கலந்துகொண்டு சால்வை அணிவித்து கோயில் திருவிழா சிறப்பாக நடத்த வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் மன்ற முக்கிய நிர்வாகிகள், சமூக ஆர்வலர் சங்கர் ஜெர்தலாவ் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் தெய்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்.